# சோழர்களின் ஆட்சியில் திருகோணமலை ஒரு வரலாற்றாய்வு

**டிலக்சிகா, யோ., கிருஷ்ணராஜா, செ.**
வரலாற்றுத்துறை, யாழ்பாணப் பல்கலைக்கழகம்
dilaksika973@gmail.com

*இவ்வாய்வானது "சோழர்களின் ஆட்சியில் திருகோணமலை ஒரு வரலாற்று ஆய்வு" என்ற தலைப்பில் அமைகின்றது. தென்னிந்திய பேரரசுகளுள் கடல் கடந்த பேரரசாக காணப்பட்டவர்கள் சோழப் பேரரசு ஆகும். கி.பி பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சோழப் பேரரசினை கடல் கடந்து விரிவடையச் செய்த சோழப் பேரரசர்களாக முதலாம் இராஜராஜன் மற்றும் அவன் மகன் முதலாம் இராஜேந்திரன் போன்றோர் காணப்படுகின்றனர். இவர்களின் கடல் கடந்த பேரரசுக் கொள்கையின் போது இலங்கை முக்கிய கேந்திர மையமாக விளங்கியதுடன் திருகோணமலைத் துறைமுகம் ஓர் முக்கிய தேவையாகவும் காணப்பட்டது.இதன் விளைவாக சோழப் பேரரசர்களின் ஆதிக்கத்திற்கு இலங்கை முழுவதும் உட்பட்டதுடன் திருகோணமலையை மையப்படுத்தி அவர்களின் அரசியல், நிர்வாக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் யாவும் காணப்பட்டன. இதனைச் சோழர்கால சான்றுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்த ஆய்வின் நோக்கங்களாக திருகோணமலைப் பகுதியில் சோழர் ஆதிக்கம் ஏற்பட்ட இடங்களை அடையாளப்படுத்தல், தொல்லியல் மூலாதாரங்களை அடையாளப்படுத்தல், திருகோண மலைத் துறைமுகம் பெற்ற முக்கியத்துவத்தை ஆராய்தல், சோழர் ஆட்சியில் திருகோணமலையை மையப்படுத்திய அவர்களின் அரசியல், நிர்வாக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளையும் அவற்றினால் ஏற்பட்ட விளைவுகளை வெளிப்படுத்தல் போன்றன உள்ளடங்குகின்றன. இவ் ஆய்வின் அணுகுமுறையானது வரலாற்று அணுகுமுறை, விபரணவியல் அணுகுமுறை, கள ஆய்வு முறை போன்ற அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் முதல் நிலை தரவுகளாக சோழர் காலம் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுச் சான்றுகளும் பாளி இலக்கியங்கள், தென்னிந்திய சான்றுகளும் இரண்டாம் நிலை தரவுகளாக வரலாற்று ஆய்வாளர்களின் நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்தரவுகள் போன்றவற்றின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் சோழர்களின் இலங்கை மீதான ஆதிக்கத்தின்போது திருகோணமலையை மையப்படுத்தியே அவர்களின் அதிகமான நடவடிக்கைகள் காணப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வானது அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள் :** சோழர்கள், திருகோணமலை, தென்னிந்தியப்பேரரசு